பொருளடக்கம்

❀

குகைவாசிகள் கொள்கைப் பாதை 6

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 13

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 19

இரண்டாம் பதிப்பின் முன்னுரை 27

ஷெய்க் ஸாலிஹ் அல்-ஃபவ்ஸான் எழுதிய முன்னுரை 45

முதல் பதிப்பின் முன்னுரை 56

1 அறிவு மற்றும் இயல்பின் மூலம் மனிதன்
கண்ணியப்படுத்தப்படுதல் 63

2 மனிதர்களின்பால் தூதர்களை அனுப்பி வேதங்களை இறக்கி
அவர்கள் கண்ணியப்படுத்தப்படுதல் 65

3 தவ்ஹீதுல் உலூஹிய்யாவும் அதன் முக்கியத்துவமும் 69

4 தூதர்கள் சிலரின் அழைப்புகளுக்கான எடுத்துக்காட்டுகள் 73

5 'லாயிலாஹ் இல்லல்லாஹ்' என்ற கொள்கையை
ஏற்றுக்கொண்டதன் காரணமாகத்
துன்புறுத்தப்பட்ட நபித்தோழர்கள் 113

6 மதீனாவின் காலகட்டத்தில்
தவ்ஹீதுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் 115

7 'இமாமத்' – தலைமைத்துவம் குறித்த இஸ்லாமிய
அறிஞர்களின் பார்வை மற்றும் அது கடமையாக்கப்பட்டுள்ளது
என்பதற்கான ஆதாரங்கள் 200

முடிவுரை 239

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு

❀

பெயரும் பிறப்பும்

ரபீஃ இப்னு ஹாதீ இப்னு முஹம்மது உமைர் அல்மத்கலீ அவர்கள் சஊதி அறேபியாவின் தெற்குப் பகுதியிலுள்ள ஜீஸான் பிரதேசத்தின் ஜராதிய்யா கிராமத்தில் ஹிஜ்ரீ 1351இன் இறுதியில் (கி.பி. 1932) பிறந்தார்கள். இந்தக் கிராமம் சாமித்தா மாநகரிலிருந்து மேற்குத் திசையில் மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. தற்போது மாநகரத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது.

ஷெய்க் அவர்கள் மதாகிலா எனும் குலத்தில் பிறந்ததால் மத்கலீ என்பது அவர்களின் குலப்பெயராக உள்ளது. அவர்கள் பிறந்து ஒன்றரை வயதான நிலையில் தந்தையை இழந்தார்கள். எனவே, தன்னுடைய தாயின் முழுமையான பராமரிப்பில் வளர்ந்தார்கள். அவர்களின் தாய் மிகச் சிறந்த முறையில் மார்க்கப்பற்றுள்ள, நேர்மை நாணயம் மிக்க, தொழுகையைத் தவறாமல் பேணக்கூடிய, நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கக்கூடிய பிள்ளையாக ஷெய்க் அவர்களை வளர்த்தார்கள்.

தொடக்கநிலைக் கல்வி

ஷெய்க் அவர்கள் எட்டு வயதை அடைந்தபோது தமது கிராமத்தின் இஸ்லாமியக் கல்வி அமர்வுகளில் கலந்துகொள்ளத் தொடங்கினார்கள். எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டார்கள். ஷெய்க் ஷைபான் அல்அரீஷீ ﵀, காழீ அஹ்மது இப்னு முஹம்மது ஜாபிர் அல்மத்கலீ ﵀, முஹம்மது இப்னு ஹுசைன் மக்கீ ﵀ ஆகியோரிடம் எழுத்தறிவைக் கற்றுக்கொண்டார்கள். திருக்குர்ஆனை முறையாகத் தஜ்வீதுடன் ஓதுவதற்குரிய கல்வியையும், அதன் உள்ளடக்கமான தவ்ஹீதுடைய கல்வியையும் ஷெய்க் முஹம்மது இப்னு முஹம்மது ஜாபிர் அல்மத்கலீ ﵀ அவர்களிடம் கற்றார்கள். அத்துடன் சாமித்தா நகரில் உள்ள ஸலஃபீ கல்விக்கூடத்திலும் பயின்றார்கள்.

ஆசிரியர்கள்

மிகவும் பிரபலமான அறிஞர்களில் ஒருவரான ஷெய்க் அல்கர்ஆவீ ﵀ அவர்களின் மாணவரான ஷெய்க் நாசிர் கலூஃபா தய்யாஷ் முபாரகீ ﵀ அவர்களிடம் இமாம் இப்னு ஹஜர் அல்அஸ்கலானீ ﵀ அவர்களின் புலூகுல் மராமையும் நுஸத்துந் நள்ரையும் கற்றார் கள். இதன் பிறகு சாமித்தா நகரிலுள்ள ஷரீஅத் கல்லூரியில் சேர்ந்து அறிஞர்கள் பலரிடமும் கல்வியைத் தேடினார்கள். அந்த அறிஞர்களில் ஷெய்க் ஹாஃபிள் இப்னு அஹ்மது அல்ஹகமீ ﵀, அவர்களின் சகோதரர் முஹம்மது இப்னு அஹ்மது அல்ஹகமீ ﵀ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அத்துடன் ஹதீஸ் துறை வல்லுநரும் அறிஞருமான ஷெய்க் அஹ்மது இப்னு யஹ்யா அந்நஜ்மீ ﵀ அவர்களிடமும், அகீதா கல்வியை அஷ்ஷெய்க் அல்அல்லாமா டாக்டர் முஹம்மது அமான் இப்னு அலீ அல்ஜாமிஃ ﵀ அவர்களிடமும் கற்றுக்கொண்டார்கள்.

மேலும், இக்காலக்கட்டத்தில் ஃபிக்ஹ் உடைய கல்வியை (ஸாதுல் முஸ்தக்னீ நூலிலிருந்து) ஷெய்க் முஹம்மது ஸகீர் கமீசீ அவர்களிடமும், அறபு இலக்கணம், மொழிப்புலமை, கவிதை ஆகியவற்றைப் பிற அறிஞர்களிடமும் கற்றார்கள். ஹிஜ்ரீ 1380இன் இறுதியில் சாமித்தா நகரின் ஷரீஅத் கல்லூரிப் படிப்பில் பட்டம் பெற்றார்கள். ஹிஜ்ரீ 1381இன் தொடக்கத்தில் ரியாத்தில் உள்ள ஷரீஅத் கல்லூரியின் ஆசிரியப்பணியில் சேர்ந்தார்கள். ஆனால், அங்குப் பணிபுரிந்து வந்த ஓரிரு மாதங்களில் மதீனா மாநகரில் அல்ஜாமிஆ அல்இஸ்லாமியா தொடங்கப்பட்டது. எனவே, ஷெய்க் அவர்கள் தம்முடைய பணியைக் கைவிட்டுவிட்டு அல்ஜாமிஆவில் மாணவராகச் சேர்ந்து நான்கு வருடங்கள் இன்னும் கல்வியைக் கற்றார்கள். ஹிஜ்ரீ 1384இல் அந்தப் படிப்பை நிறைவுசெய்து மிக வும் சிறந்த மாணவ அறிஞராகத் தேர்ச்சி அடைந்தார்கள்.

அல்ஜாமிஆ அல்இஸ்லாமியாவில் அவர்களின் ஆசிரியர்கள்

- அஷ்ஷெய்க், அல்அல்லாமா, சஊதி அறேபியாவின் முத்த முஃப்தியான அப்துல் அஸீஸ் இப்னு பாஸ் ﵀ – இவர்களிடம் அல்அகீதா அத்தஹாவிய்யாவைக் கற்றார்கள்.
- அஷ்ஷெய்க், அல்அல்லாமா, அல்முஹத்திஸ், முஹம்மது நாஸிருத்தீன் அல்அல்பானீ ﵀ – இவர்களிடம் ஹதீஸ் கல்வியைக் கற்றார்கள்.

- அஷ்ஷெய்க், அல்அல்லாமா, அப்துல் முஹ்சின் அல்அப் பாது. – இவர்களிடம் முதன் மூன்று வருடங்கள் ஃபிக்ஹைக் கற்றார்கள்.
- அஷ்ஷெய்க், அல்அல்லாமா, அல்ஹாஃபிள், அல்முஃ பிஸ்ஸிர், அல்முஹத்திஸ், உஸூல் அறிஞர், அறபு மொழி யியல் அறிஞர், அல்ஃபகீஹ், மாமேதை முஹம்மது அல்அ மீன் அஷ்ஷன்கீத்தீ ﵀ அவர்களிடம் அவர்களின் அள்வாஉல் பயான் திருக்குர்ஆன் விரிவுரை நூலையும், இன்னும் உஸூ லுல் ஃபிக்ஹ் எனும் சட்டவியலின் அடிப்படைகளையும் நான்கு வருடங்கள் கற்றார்கள்.
- அஷ்ஷெய்க் ஸாலிஹ் அல்இராக்கி ﵀ அவர்களிடம் அகீதா கல்வியைக் கற்றார்கள்.
- அஷ்ஷெய்க், அல்முஹத்திஸ் அப்துல் கஃப்ஃபார் ஹஸன் அல்ஹின்தீ ﵀ அவர்களிடம் ஹதீஸ்களின் தரங்கள் மற்றும் சொல்லாடல்கள் குறித்துக் கற்றுக்கொண்டார்கள்.

ஷெய்க் அவர்கள் தமது நான்கு வருடப் பட்டப் படிப்பை ஜாமி ஆவில் நிறைவுசெய்த பின்பு, சிறிது காலம் ஜாமிஆவின் கல்வி நிறுவனம் ஒன்றில் ஆசிரியர் பணியில் இருந்தார்கள். இதன் பிறகு தம்முடைய முதுநிலை மேல்படிப்புக்காக மன்னர் அப்துல் அஸீஸ் பல்கலைக் கழகத்தின் மக்கா மாநகரக் கிளையில் விண்ணப்பித்தார் கள். ஹிஜ்ரீ 1397இல் ஹதீஸ் துறையில் அவர்களின் பிரபலமான ஆய்வாகிய 'இமாம் முஸ்லிம் மற்றும் தாரகுத்னீ இருவருக்கும் மத்தியில்' எனும் ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். இதே பல்கலைக்கழகத்தில் அந்நுகத் அலா கிதாபி இப்னு ஸலாஹ் (இப்னு ஸலாஹின் நூல் குறிப்புகள்) எனும் தலைப்பில் ஆய்வு செய்து ஹிஜ்ரீ 1400இல் முனைவர் பட்டத்தையும் பெற்றார்கள். இதன் பிறகு அவர்கள் மதீனா ஜாமிஆவில் ஹதீஸ் துறையில் பேராசிரியர் பொறுப்பை ஏற்றார்கள்.

பண்புநலன்கள்

ஷெய்க் அவர்கள் தம்முடைய சகோதரர்கள், மாணவர்கள், தம்மைச் சந்திக்க வருபவர்கள் என அனைவரிடமும் மிக்க பணிவுடன் நடந்துகொள்வார்கள். அதுபோன்றே தமது வீடு, ஆடைகள், வாகனம் ஆகியவற்றின் விசயத்திலும் ஆடம்பரம் இல்லாமல் வாழ்வார்கள். தம்மிடம் வருபவர்களுக்கு நன்மையை நாடுவார்கள். கண்ணியமான முறையில் அவர்களிடம் உரையாடுவார்கள்.

ஷெய்க்கிடம் உரையாடுபவருக்குச் சலிப்பு ஏற்படாது. அவர்களின் சபைகளில் ஸுன்னாவின் கல்வி நிறைந்திருக்கும். பித்அத் மற்றும் பித்அத்வாதிகள் குறித்த எச்சரிக்கைகள் இருக்கும். ஸலஃபுடைய பாதையைப் பற்றிப்பிடிக்கும் மாணவர்களை மிகவும் நேசிப்பார்கள். அத்தகையவர்களை மிகவும் கண்ணியப்படுத்துவார்கள். தம்மால் இயன்ற அளவு அவர்களுக்குத் தம்முடைய செல்வத்தாலும் உதவுவார்கள். கல்வியைத் தேடும் மாணவர்களுக்கு அவர்களின் வீட்டில் எப்போதும் வரவேற்பு இருக்கும். பல சமயங்களில் காலை சிற்றுண்டி, மதிய உணவு, இரவு உணவு என மூன்று வேளையும் மாணவர்களை வரவேற்று உபசரிப்பார்கள்.

ஆக்கங்கள்

ஷெய்க் அவர்களின் நூல்கள் ஸுன்னாவின் உயர்வைப்பற்றியும் பித்அத்தின் இழிவைப்பற்றியும் அமைந்திருக்கும். அவற்றில் சில:

- மன்ஹஜுல் அன்பியா ஃபித் தஅவத்தி இலல்லாஹ் ஃபீஹில் ஹிக்மத்து வல்அக்ல் (منهج الأنبياء في الدعوة إلى الله فيه الحكمة والعقل) - அல்லாஹ்வின்பால் அழைப்பதில் இறைத்தூதர்களின் வழி முறை; அதில்தான் ஞானம்; புத்திசாலித்தனம்
- மன்ஹஜு அஹ்லிஸ் ஸுன்னா ஃபீ நக்திர் ரிஜாலி வல்குத்பி வத்தவாஇஃப் (منهج أهل السنة في نقد الرجال والكتب والطوائف) - தனிமனிதர்கள், புத்தகங்கள், கூட்டங்கள் இவற்றை விமர்சிப்பதில் அஹ்லுஸ்ஸுன்னாவின் வழிமுறை
- பய்னல் இமாமைனி மூஸ்லிம் வ தாரகுத்னீ (بين الإمامين مسلم والدارقطني) - இமாம் முஸ்லிம் மற்றும் இமாம் தாரகுத்னீ இருவருக்கிடையே – இந்தத் தலைப்பில் ஆய்வுசெய்து முதுநிலைப் பட்டம் பெற்றுள்ளார்கள்.
- தஹ்கீக் கிதாபு அல் மத்கல் இலஸ் ஸஹீஹ் (تحقيق كتاب المدخل إلى الصحيح للحاكم طبع الجزء الأول منه) - மத்கல் என்ற நூலை ஆய்வுநோக்கில் சரியாக உறுதிசெய்தல்
- தஹ்கீக் கிதாபு அத் தவஸ்ஸுல் வல் வசீலா லி இமாமி இப்னு தைமிய்யா (تحقيق كتاب التوسل والوسيلة " للإمام ابن تيمية) - இப்னு தைமிய்யாவின் அல்வசீலா என்ற நூலை மெய்ப்படுத்துதல்
- தக்சீமுல் ஹதீஸ் (تقسيم الحديث إلى صحيح وحسن وضعيف بين واقع المحدثين ومغالطات المتعصبين رد على عبد الفتاح أبو غدة ومحمد عوامه) - நபிமொழிகளை

வகைப்படுத்தித் தரம் பிரித்தல் மற்றும் பிடிவாதக்காரர்களின் தவறுகளுக்கு மறுப்புகள்

- கஷ்ஃபு மவ்கிஃபு அல்கஸ்ஸாலீ மினஸ் ஸுன்னா வஅஹ்லிஹா (كشف موقف الغزالي من السنة وأهلها) - ஸுன்னா மற்றும் அதைப் பின்பற்றுவோர் குறித்து கஸ்ஸாலியின் நிலைப்பாட்டை அம்பலப்படுத்துதல்
- ஸத்து உத்வானில் மூல்கிதீன் (صد عدوان الملحدين وحكم الاستعانة بغير المسلمين) - இறைமறுப்பு விரோதிகளுக்கு மறுப்பு மற்றும் மூஸ்லிமல்லாதவர்களிடம் உதவி தேடுவதின் சட்டங்கள்
- மகானத்து அஹ்லில் ஹதீஸ் (مكانة أهل الحديث) - ஹதீஸ்துறை கல்வியாளர்களின் அந்தஸ்து
- மன்ஹஜு இமாம் முஸ்லிம் (منهج الإمام مسلم في ترتيب صحيحه) - இமாம் முஸ்லிம் அவர்கள் ஹதீஸ்களைத் தொகுத்தளித்த வழிமுறை
- அள்வாஉல் இஸ்லாமிய்யா அலா அகீததி செய்யிது குதுப் (أضواء إسلامية على عقيدة سيد قطب وفكره) - இஸ்லாமிய ஒளியில் செய்யிது குதுப் அவர்களது கொள்கை மற்றும் அவரின் சிந்தனைகள் குறித்த பார்வை
- மதாயினு செய்யிது குதுப் ஃபீ அஸ்ஹாபி ரசூல் ﷺ (مطاعن سيد قطب في أصحاب رسول الله صلى الله عليه وسلم) - நபித்தோழர்களைப் பற்றி செய்யிது குதுப் கூறியுள்ள அவதூறுகள்
- அல் ஹத்துல்ஃபாஸில் பய்னல் ஹக்கி வல்பாதில் (الحد الفاصل بين الحق والباطل حوار مع بكر أبو زيد) - மெய்யுக்கும் பொய்யுக்கும் இடையே பிரித்துக்காட்டும் கோடு (பக்ர் அபூ ஸைது அவர்களுடனான வாதப்பிரதி வாதங்கள்)
- அந்நஸ்ருல் அஜீஸ் அலா அர்ரத்தில் வஜீஸ் (النصر العزيز على الرد الوجيز) - சுருக்கமான மறுப்புகள்
- அத்தஅஸ்ஸுபுத் தமீம் (التعصب الذميم وآثاره) - இழிவான பிடிவாதம்
- ஹுக்முல் இஸ்லாம் ஃபீ மன் சப்ப ரசூல் ﷺ (حكم الإسلام في من سبّ رسول الله أو طعن في شمول رسالته) - இறைத்தூதரைத் திட்டுவோர் பற்றி இஸ்லாம் கூறும் தீர்ப்புகள்

இவை மட்டுமின்றி இன்னும் பல நூல்களை அவர்களின் இணைய தளங்கள் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

பேரறிஞர்களின் புகழ்மாலைகள்

ஷெய்க் அவர்களைக் குறித்து மூத்த பேரறிஞர்களும் பிற அறிஞர் களும் கூறிய கருத்துகள் கவனத்திற்குரியவை. ஷெய்குல் இஸ்லாம் இப்னு பாஸ் ﵀ அவர்களின் புகழ்ச்சியை முதலில் இங்குக் குறிப்பிட வேண்டும்.

ஷெய்க் அப்துல்லாஹ் அல்அஹ்மர் கூறுகிறார்கள்: நான் பதினான்கு வருடங்களுக்கு முன்பே நமது ஷெய்க் இப்னு பாஸ் ﵀ அவர்களி டம், 'எங்களின் ஷெய்க்கே! ஷெய்க் ரபீஃ அவர்கள் இன்னின் னாரை, இன்னின்ன அழைப்பாளர்களையெல்லாம் விமர்சிக்கிறாரே? (இது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?)' என்று கேட்டேன். அதற்கு ஷெய்க் இப்னு பாஸ் அவர்கள், 'அல்லாஹ்வுக்குப் பயந்துகொள்ளுங்கள். அவர் ஸுன்னாவின் இமாமாக இருக்கிறார்' என்று பதில் சொன்னார்கள்.

இன்னொரு சமயத்தில் இமாம் இப்னு பாஸ் ﵀ அவர்களிடம் ஷெய்க் அமான் ஜாமிஃ மற்றும் ஷெய்க் ரபீஃ அவர்களைக் குறித்துக் கேட்டபோது, 'ஷெய்கு அமான் அல்ஜாமிஃ எனது நெருங்கிய தோழர்களில் ஒருவர். மற்றவர் ஷெய்கு ரபீஉ இப்னு ஹாதீ மத்கலீ ஆவார். இருவருமே அஹ்லுஸ்ஸுன்னாவைச் சேர்ந்தவர்கள். இஸ்லாமியக் கல்வி, சிறப்பு, கொள்கை என யாவற்றிலும் நற்பெயர் பெற்றவர்கள்' என்று கூறினார்கள்.

இமாம் அல்பானீ ﵀ கூறுகிறார்கள்: 'நான் சுருக்கமாகச் சொல்லவரு வது என்னவெனில், மார்க்கத்தின் பெயரால் புதுமைகள் (பித்அத்து கள்) நிறைந்த இன்றைய காலக்கட்டத்தில் அல்ஜர்ஹ் வத் தஅதீல் (மார்க்கப் பிரசாரகர்களின் குறை நிறைகள் அடிப்படையில் நீதியாக விமர்சிக்கும் கல்வி) கொடியைத் தூக்கி நிற்பவர் நமது சகோதரர் டாக்டர் ரபீஃதான். அவரின் விமர்சனத்திற்குப் பதில் அளிப்பவர்கள் யாருமே கல்வியறிவுடன் பதிலளிக்கவில்லை.'

ஷெய்க் ஃபவ்ஸான் கூறுகிறார்கள்: 'இறைவழிக்கு அழைப்பதில் இறைத்தூதர்களின் வழிமுறை' என்ற அவர்களது நூல் நுட்பமும் ஞானமும் நிறைந்ததாகும். அதில் இறைத்தூதர்கள் காட்டிய சரியான வழியையும், மாறுபட்ட கூட்டத்தினரின் தவறான வழியையும் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்கள். அதில் நல்ல பல உதாரணங்களையும், கூடுதல் ஆதாரங்களையும் கூறியிருப் பது கவனிக்கத்தக்கதாகும்.உண்மையில் இது தன் நோக்கத்தை

முழுமையாக நிறைவேற்றியிருக்கிறது. உண்மையை உரைக்க நாடுவோருக்கு இதுவே போதுமானதாகும். கூடவே மறுப்பாளர் களுக்கும் நல்ல பல ஆதாரங்களும் உள்ளன.'

ஷெய்க் முக்பில் அல்வாதிஈ ﵀ கூறுகிறார்கள்: 'ஷெய்க் ரபீஃ இப்னு ஹாதீ (அல்லாஹ் அவரைப் பாதுகாப்பானாக) அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்கு அறிவுரை சொல்கிறேன். அவர்கள் தம்முடைய வாழ்வின் பெரும் பகு தியை அல்இக்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தவர்களை அறிந்து கொள்வதற்குச் செலவழித்துள்ளார்கள். அந்த இயக்கத்தவர்களைப் பற்றியும் அவர்களின் உண்மைநிலைகள் பற்றியும், இன்னும் பல கூட்டங்களின் இயல்புகளைப் பற்றியும் நன்கு அறிந்துவைத்தி ருக்கிறார்கள். ஷெய்க் ரபீஃ அவர்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும்படி நான் சொல்லவில்லை. மாறாக, அவர்களின் கல்வியிலிருந்து பயனடைந்துகொள்ளுமாறு கூறுகிறேன். மஹ்மூது அல்ஹத்தாதிடமிருந்தோ, ஃபரீது மாலிகிடமிருந்தோ ஃபத்வாவைக் கேட்காதீர்கள். நல்ல மனிதரிடம், கண்ணியமிக்க அறிஞர்களில் ஓர் அறிஞரிடம், அல்இக்வானுல் முஸ்லிமூன் கூட்டத்தைக் களத்தில் எதிர்கொள்பவரிடம், (ஷெய்க் ரபீஃ அவர்களிடம்) ஃபத்வா கேளுங்கள் என்று சொல்கிறேன்.'

ஷெய்க் ரபீஃ அவர்களைக் குறித்து ஷெய்க் அஹ்மது அந்நஜ்மீ ﵀ அவர்கள் கூறினார்கள்: அவர் அஹ்லுஸ்ஸுன்னா ஷெய்க்குகளில் ஒருவர். ஸுன்னாவைப் பரப்புகின்றவராக, பித்அத்திற்கு எதி ராகப் போர் தொடுப்பவராக இருக்கிறார். அவர் ஸுன்னாவைச் சுமப்பவர். ஸுன்னாவையும் தவ்ஹீதையும் பாதுகாப்பவர். யாரெல்லாம் அவரை வெறுக்கிறார்களோ, அவர்கள் ஸுன்னாவை வெறுப்பவர்கள் ஆவார்கள். யாரெல்லாம் அவரைவிட்டு விலகி ஓடுகிறார்களோ, அவர்கள் ஸுன்னாவைவிட்டு விலகி ஓடுபவர்கள்.'

ஷெய்க் ஸாலிஹ் அல்-ஃபவ்ஸான்[8] எழுதிய முன்னுரை

❀

படைப்புகள் அனைத்தையும் படைத்துப் பராமரிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் தன் தூதரைப் பின்பற்றும்படியும் அவர் சென்ற பாதையின் பக்கம் அழைக்கும்படியும் நமக்குக் கட்டளையிட்டுள்ளான். சாந்தியும் ஸலவாத்தும் நம்முடைய தூதர் முஹம்மதுமீதும் அவருடைய குடும்பத்தார், தோழர்கள் மற்றும் அவரை உளத்தூய்மையுடன் பின்பற்றிய அனைவரின்மீதும் நிலவட்டுமாக.

அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பதே தூதர் மற்றும் அவரைப் பின்பற்றுவோரின் வழி. அல்லாஹ் கூறுகிறான்:

قُلْ هَذِهِ سَبِيلِي أَدْعُو إِلَى اللَّهِ عَلَى بَصِيرَةٍ أَنَا وَمَنِ اتَّبَعَنِي وَسُبْحَانَ اللَّهِ وَمَا أَنَا مِنَ الْمُشْرِكِينَ

‘தூதரே! நீர் கூறுவீராக: ‘இதுதான் எனது பாதை. நானும் என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான அறிவுடன் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றோம். அல்லாஹ் தூய்மையானவன். நான் இணைவைப்பாளர்களின் உள்ளவன் அல்ல.’ (குர்ஆன் 12:108)

---

8 ஃபவ்ஸான்: நமது சமகால அறிஞர். சஊதி அரேபியாவில் ஹிஜ்ரீ 1354 (கி.பி.1933)இல் ஷமாசிய்யா கோத்திரத்தில் பிறந்தவர். இமாம் அப்துல் அஜீஸ் இப்னு பாஸ் ﷺ அவர்களின் மாணவர்களில் ஒருவர். இஸ்லாமிய அடிப்படைகள், சட்டங்கள், வழிமுறைகள் பற்றி அறுபதிற்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் ஷரஹ் அல்அகீதத்துல் வாசித்தியா, அல்இர்ஷாத் இலா ஸஹீஹில் இஃதிகாத், அல்முலக்கஸ் அல்ஃபிக்ஹ், உணவுகள் மற்றும் அறுத்துப் பலியிடலும் வேட்டையாடலும் பற்றிய சட்டங்கள் (முனைவர் பட்ட ஆய்வேடு), யூசுஃப் கர்ளாவீயின் ‘அல்ஹலால் வல்ஹறாம்’ நூலுக்கு மறுப்பு போன்றவை குறிப்பிடத்தக்கவை. இன்று மூத்த அறிஞர்கள் குழு மற்றும் ஃபத்வா குழுவின் உறுப்பினராக இருந்து வருகிறார்.

மாறாக, அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பதுதான் தூதர்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றும் அனைவரின் பணியாகவும் இருக்கும். மக்களை காரிருளிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம், நிராகரிப்பிலிருந்து வெளியேற்றி ஈமானின் பக்கம், ஷிர்க்கிலிருந்து வெளியேற்றி தவ்ஹீதின் பக்கம், நரகத்திலிருந்து வெளியேற்றி சுவனத்தின் பக்கம் கொண்டுவருவதுதான் அவர்களின் பணியாகும்.

அந்த அழைப்பு சில அடிப்படையான அம்சங்களால் நிலை பெற்றுள்ளது. அதில் ஏதேனும் ஒன்று ஆட்டம்கண்டுவிட்டாலும் அது சரியான அழைப்பாக ஆகாது; எதிர்பார்த்த பலனைத் தராது. எவ்வளவுதான் அதற்காக முயற்சிகள் செய்யப்படாலும் அது நேர விரயமாகத்தான் முடியும். தற்கால அழைப்புகளில் இதற்கான உதாரணங்களைக் காணலாம். அவை இந்த அடிப்படைகளைக் கொண்டு நிலைபெற்றவை அல்ல.

இந்த அடிப்படைகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:

1. தாம் எந்த விசயத்தின் பக்கம் மக்களை அழைக்கின்றோமோ அது குறித்த அறிவு: மூடனால் சிறந்த அழைப்பாளனாக இருக்க முடியாது. அல்லாஹ் தன் தூதருக்குக் கட்டளையிடுகிறான்,

قُلْ هَذِهِ سَبِيلِي أَدْعُو إِلَى اللَّهِ عَلَى بَصِيرَةٍ أَنَا وَمَنِ اتَّبَعَنِي وَسُبْحَانَ اللَّهِ وَمَا أَنَا مِنَ الْمُشْرِكِينَ

தூதரே! நீர் கூறுவீராக: 'இதுதான் எனது பாதை. நானும் என்னைப் பின்பற்றியவர்களும் தெளிவான அறிவுடன் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றோம். அல்லாஹ் தூய்மையானவன். நான் இணைவைப்பாளர்களின் உள்ளவன் அல்ல.' (குர்ஆன் *12:108*)

ஏனெனில், அழைப்பாளன் அசத்தியத்தின் அறிஞர்களையும் சத்தியத்தை வீழ்த்தும் பொருட்டு அவர்கள் முன்வைக்கும் ஆட்சேபணைகளையும் எதிர்கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்,

وَجَادِلْهُمْ بِالَّتِي هِيَ أَحْسَنُ

'அவர்களுடன் அழகிய முறையில் விவாதம் செய்வீராக.' *(16:125)*

நபி ﷺ அவர்கள் முஆது இப்னு ஜபலை ؓ யெமன் தேசத்தை நோக்கி அனுப்பியபோது கூறினார்கள்,

إِنَّكَ تَأْتِي قَوْمًا مِنْ أَهْلِ الْكِتَابِ

1

அறிவு மற்றும் இயல்பின் மூலம் மனிதன் கண்ணியப்படுத்தப்படுதல்

❀

அவன் மனிதனுக்கு வழங்கியுள்ள இந்த பெரும் அருட்கொடை களுடன் அறிவு என்னும் அருட்கொடையையும் வழங்கியுள்ளான். அதுதான் மனிதனை இறைவன் அளிக்கும் பொறுப்பிற்குத் தகுதியானவனாக ஆக்குகிறது. தூதர்கள் கொண்டுவரும் வழி காட்டலுடன் சத்தியத்துடன் முழுமையாக ஒத்துப்போகும் இயல் பையும் மனிதனுக்கு வழங்கியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்:

فَأَقِمْ وَجْهَكَ لِلدِّينِ حَنِيفًا فِطْرَتَ اللَّهِ الَّتِي فَطَرَ النَّاسَ عَلَيْهَا لَا تَبْدِيلَ لِخَلْقِ اللَّهِ ذَلِكَ الدِّينُ الْقَيِّمُ وَلَكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُونَ

‘தூதரே! நீரும் உம்மைப் பின்பற்றியவர்களும் எல்லா மார்க்கங் களையும் விட்டுவிட்டு இயற்கை மார்க்கமான இஸ்லாமின் பக்கம் உங்களின் முகத்தை திருப்பிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் படைப்பில் எவ்வித மாற்றமுமில்லை. இதுதான் கோணலற்ற நேரான மார்க்கமாகும். ஆயினும் மக்களில் பெரும்பாலோர் இதுதான் சத்திய மார்க்கம் என்பதை அறியமாட்டார்கள்.’ (30:30)

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَا مِنْ مَوْلُودٍ إِلَّا يُولَدُ عَلَى الفِطْرَةِ، فَأَبَوَاهُ يُهَوِّدَانِهِ أَوْ يُنَصِّرَانِهِ، أَوْ يُمَجِّسَانِهِ، كَمَا تُنْتَجُ البَهِيمَةُ بَهِيمَةً جَمْعَاءَ، هَلْ تُحِسُّونَ فِيهَا مِنْ جَدْعَاءَ، ثُمَّ يَقُولُ أَبُو هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ: {فِطْرَةَ اللَّهِ الَّتِي فَطَرَ النَّاسَ عَلَيْهَا

‘எந்தக் குழந்தையாக இருந்தாலும் அது இயற்கை நிலையிலேயே பிறக்கிறது. அதனுடைய தாய்தந்தையர்தாம் அதனை யூதராகவோ கிறித்துவராகவோ நெருப்பு வணங்கியாகவோ ஆக்கிவிடுகிறார்கள். கால்நடைகள் குறைகளற்ற கால்நடைகளை ஈனுவதைப்போல,

அவை காது அறுபட்ட நிலையில் அல்லது இன்னபிற உறுப்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் பிறப்பதைப் பார்த்திருக்கிறீர்களா?' பின்னர் இந்த ஹதீஸின் அறிவிப்பாளரான அபூ ஹுறைறா 'தூதரே! நீரும் உம்மைப் பின்பற்றியவர்களும் எல்லா மார்க்கங் களையும் விட்டுவிட்டு இயற்கை மார்க்கமான இஸ்லாமின் பக்கம் உங்களின் முகத்தை திருப்பிக் கொள்ளுங்கள்' என்ற இறை வசனத்தை ஓதினார். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﷺ, புகாரீ 1358, முஸ்லிம் 2658)

(ஹாபிழ் இப்னு ஹஜர் கூறுகிறார், 'இந்த ஹதீஸில் வந்துள்ள 'இயற்கை நிலை' என்ற வார்த்தையில் மக்கள் கருத்துவேறுபாடு கொண்டுள்ளார்கள். அவற்றில் 'அது இஸ்லாமைக் குறிக்கிறது' என்ற கருத்தே மிகவும் பிரபல்யமானது. இப்னு அப்துல் பிர்ரின் கூற்றுப்படி, இதுவே பெரும்பாலான ஸலஃபுகளிடத்தில் அறியப்பட்ட ஒன்றாக இருக்கிறது. அறிஞர்கள் இதில் ஒருமித்த கருத்து கொண்டுள்ளார்கள்.)

இயாழ் இப்னு ஹிமார் அல்ஜாஷியீ ﷺ கூறுகிறார்,

أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ ذَاتَ يَوْمٍ فِي خُطْبَتِهِ: أَلَا إِنَّ رَبِّي أَمَرَنِي أَنْ أُعَلِّمَكُمْ مَا جَهِلْتُمْ، مِمَّا عَلَّمَنِي يَوْمِي هَذَا، كُلُّ مَالٍ نَحَلْتُهُ عَبْدًا حَلَالٌ، وَإِنِّي خَلَقْتُ عِبَادِي حُنَفَاءَ كُلَّهُمْ، وَإِنَّهُمْ أَتَتْهُمُ الشَّيَاطِينُ فَاجْتَالَتْهُمْ عَنْ دِينِهِمْ، وَحَرَّمَتْ عَلَيْهِمْ مَا أَحْلَلْتُ لَهُمْ، وَأَمَرَتْهُمْ أَنْ يُشْرِكُوا بِي مَا لَمْ أُنْزِلْ بِهِ سُلْطَانًا

'ஒரு நாள் நபி ﷺ அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அவர்கள் தங்களின் உரையில் கூறியதாவது: 'என்னுடைய இறைவன் இந்த நாளில் எனக்குக் கற்றுத் தந்தவற்றிலிருந்து நீங்கள் அறியாத வற்றை உங்களுக்குக் கற்றுக்கொடுக்கும்படி எனக்குக் கட்டளை யிட்டுள்ளான்: 'நான் என் அடியார்களுக்கு வழங்கியவை அனைத்தும் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டவையாகும். நிச்சயமாக நான் என் அடியார்கள் அனைவரையும் முஸ்லிம் களாகவே படைத்துள்ளேன். ஆனால், ஷைத்தான்கள் அவர் களிடம் வந்து அவர்களின் மார்க்கத்தைவிட்டு அவர்களைத் திருப்பு கிறார்கள். நான் அவர்களுக்கு அனுமதித்ததை அவர்களுக்குத் தடைசெய்கிறார்கள். எனக்கு இணையாக மற்றவர்களை ஆக்கு மாறு கட்டளையிடுகிறார்கள். நான் அதற்கு எந்த ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை...' (முஸ்லிம் 2865)

வந்தார்கள். அச்சமயத்திலும் அவர் 'அஹது, அஹது' என்றுதான் கூறிக்கொண்டிருந்தார். (இப்னு மாஜா 150, ஹாகிம் 5238, ஸஹீஹ் இப்னு மாஜா 122)

இப்னு ஹிஷாமில் இடம்பெற்றுள்ள ஓர் அறிவிப்பு: வெயில் நன்கு ஏறிவிட்டால் உமைய்யா இப்னு கலஃப் பிலாலை இழுத்துக் கொண்டு மக்காவின் சமவெளிப் பகுதிக்குச் செல்வான். பின்னர் பெரும் பாறையை அவர்மீது வைக்க உத்தரவிடுவான். அது பிலாலின் நெஞ்சுப்பகுதியில் வைக்கப்படும். பின்னர் கூறுவான், 'அல்லாஹ்வின்மீது ஆணையாக, நீ சாகும்வரை இப்படித்தான் இருப்பாய் அல்லது நீ முஹம்மதை நிராகரித்து லாத்தையும் உஸ்ஸாவையும் வணங்க வேண்டும். அந்த நிலையிலும் அவர், 'அஹது, அஹது' என்றே கூறுவார்.'

தவ்ஹீதை ஏற்றுக்கொண்டதன் காரணமாகவே சுமைய்யா கொல்லப்பட்டார், அவர் ஓர் அரசியல் தலைவராக இருந்தார் என்பதனால் அல்ல.

முஜாஹித ﷺ கூறுகிறார், 'இஸ்லாமுக்காக உயிர்த்தியாகம் செய்த முதல் பெண்மணி அம்மாரின் தாயார் சுமைய்யா ஆவார். அபூஜஹல் அவரது பிறப்புறுப்பில் ஈட்டியைப் பாய்ச்சிக் கொன்றான்.' (பார்க்க: அத்தப்காத் இப்னு சஃத்)

இப்னு சஃத ﷺ கூறுகிறார், 'சுமைய்யா ﷺ ஆரம்பத்திலேயே இஸ்லாமை ஏற்றுக்கொண்ட பெண்மணியாவார். அவர் அல்லாஹ்வுக்காகத் துன்புறுத்தப்பட்ட பெண்களில் ஒருவராவார். ஆயினும், அவர் பொறுமையைக் கடைப்பிடித்தார். ஒரு நாள் அபூஜஹல் அவரது பிறப்புறுப்பில் ஈட்டியைப் பாய்ச்சிக் கொன்றான்.' (பார்க்க: அத்தப்காத் இப்னு சஃத்)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், 'அதிகாரம் அல்லாஹ்வின் வசமே உள்ளது. தான் நாடியவர்களுக்கு அவன் அதனை வழங்குவான்.' அவர் கூறினார், 'உமக்காக அறபுகளுக்கு எதிராக எங்கள் உயிர்களை நாங்கள் பணயம் வைக்க வேண்டும். ஆனால், அதிகாரம் எங்களைத் தவிர மற்றவர்களுக்குப் போகும். அப்படியானால் உமது விசயம் எங்களுக்குத் தேவையில்லை.' (இப்னு ஹிஷாம்)

இதன் சுருக்கமாகப் பின்வருமாறு கூறலாம்: இறைத்தூதர்கள் ஓர் ஆட்சியைக் கவிழ்க்கவோ வேறோர் ஆட்சியை நிலை நிறுத்தவோ வரவில்லை. அவர்கள் ஆட்சியதிகாரத்தை விரும்பவுமில்லை. அதற்காக மக்களை அணிதிரட்டவுமில்லை. அவர்கள் மக்களுக்கு நேரான வழியைக் காட்டுவதற்காக, ஷிர்க்கிலிருந்தும் வழிகேட்டிலிருந்தும் அவர்களை மீட்பதற்காக, காரிருளிலிருந்து ஒளியின் பக்கம் அவர்களை அழைத்துச் செல்வதற்காக, அல்லாஹ்வுடைய தண்டனையை அவர்களுக்கு நினைவூட்டுவதற்காக வந்தார்கள்.

ஆட்சியதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தாலும் அதனைப் புறக்கணித்துவிட்டு தம் பாதையில் முன்னேறிச் சென்றிருப்பார்கள். தங்களுக்கு அரசனாக ஆகும்படிக் குறைஷிகள் நபியவர்களிடம் ஆசைகாட்டினார்கள். ஆனால், நபியவர்கள் மறுத்துவிட்டார்கள்.

அரசராக, தூதராக இருக்க விரும்புகிறீர்களா? அல்லது அடியாராகவும் தூதராகவும் இருக்க விரும்புகிறீர்களா? என்று நபியவர்களிடம் கேட்கப்பட்டது. நபியவர்கள் அடியாராகவும் தூதராகவும் இருப்பதையே தேர்வு செய்தார்கள். அபூ ஹுறைறா ﷺ கூறுகிறார்:

جَلَسَ جِبْرِيلُ إِلَى النَّبِيِّ صلى الله عليه وسلم فَنَظَرَ إِلَى السَّمَاءِ، فَإِذَا مَلَكٌ يَنْزِلُ، فَقَالَ جِبْرِيلُ: إِنَّ هَذَا الْمَلَكَ مَا نَزَلَ مُنْذُ يَوْمِ خُلِقَ قَبْلَ السَّاعَةِ، فَلَمَّا نَزَلَ قَالَ: يَا مُحَمَّدُ، أَرْسَلَنِي إِلَيْكَ رَبُّكَ، قَالَ: أَفَمَلِكًا نَبِيًّا يَجْعَلُكَ؟, أَوْ عَبْدًا رَسُولًا؟, فَقَالَ جِبْرِيلُ: تَوَاضَعْ لِرَبِّكَ يَا مُحَمَّدُ، قَالَ: بَلْ عَبْدًا رَسُولًا

'ஜிப்ரீல் நபியவர்களிடம் வந்து அமர்ந்தார். அவர் வானத்தை நோக்கிப் பார்த்தார். அப்போது ஒரு வானவர் இறங்கிக் கொண்டிருந்தார். ஜிப்ரீல் கூறினார், 'இந்த வானவர் படைக்கப்பட்டதிலிருந்து இந்தச் சமயத்திற்கு முன்னர் வரை இறங்கியதில்லை.'

7

‘இமாமத்’ – தலைமைத்துவம் குறித்த இஸ்லாமிய அறிஞர்களின் பார்வை மற்றும் அது கடமையாக்கப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரங்கள்

❀

இமாம் அபுல் ஹஸன் மாவரிதீ கூறுகிறார்: ‘தலைமைத்துவம் நபித்துவத்தை அடுத்து மார்க்கத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் உலக விவகாரங்களை நிர்வகிக்கும் பொருட்டும் ஏற்படுத்தப்பட்ட தாகும். அனைவரின் ஒருமித்த கருத்துப்படி சமூகத்தில் அதனைச் சரியான முறையில் நிறைவேற்றுபவருக்குக் கட்டுப்படுவது கடமையாகும்’ ‘அஸம்’ என்பவர் இதில் கருத்துவேறுபட்டுள்ளார். இது மார்க்க அடிப்படையில் கடமையானதா, அல்லது அறிவின் அடிப்படையில் கடமையானதா என்பதில்.

ஒரு சாரார் கூறுகிறார்கள்: ‘அறிவின் அடிப்படையில்தான் கடமை யாக்கப்பட்டுள்ளது. இயல்பாகவே மக்கள் அநியாயத்திலிருந்து தங்களைப் பாதுகாக்கும் தலைவரை ஏற்றுக்கொள்வது அவசியம் என்ற விசயத்தை அறிந்துவைத்துள்ளார்கள்.’

இன்னொரு சாரார், இது மார்க்க அடிப்படையில் கடமையாக்கப் பட்ட விசயம் என்று கூறுகிறார்கள். ஏனெனில், தலைவர் மார்க்க விவகாரங்களை நிர்வகிக்கின்றவர். மனித அறிவு இதனைக் கட்டாய மாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறவில்லை. அது கடமை யானது என்பதற்குப் பின்வரும் வசனத்தை ஆதாரமாகக் காட்டு கிறார்கள்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُولِي الْأَمْرِ مِنْكُمْ

‘நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள். தூதருக்கும் உங்களில் அதிகாரம் உடையவர்களுக்கும் கட்டுப் படுங்கள்.’ (குர்ஆன் 4:59)

அவர் கூறுகிறார், 'நம்மில் அதிகாரம் உடையோருக்குக் கட்டுப்படுவது கட்டாயக் கடமையாகும். அவர்கள்தாம் நம்மை வழிநடத்தும் தலைவர்கள்.'

பின்னர் கூறுகிறார், 'நபியவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா ﵁ அறிவிக்கிறார்: 'விரைவில் எனக்குப் பிறகு ஆட்சியாளர்கள் வருவார்கள். நல்லவர் தம் நல்ல பண்பால் உங்களை ஆட்சி செய்வார். தீயவர் தம் தீய பண்பால் உங்களை ஆட்சி செய்வார். சத்தியத்தோடு ஒத்துப்போகும் அனைத்து விசயங்களிலும் அவர்களுக்குக் கட்டுப்படுங்கள். அவர்கள் நல்லது செய்தால் அது உங்களுக்கும் அவர்களுக்கும் நல்லதாகும். அவர்கள் தீயது செய்தால் அதனால் அவர்களுக்குத்தான் கேடு. உங்களுக்கு எந்தத் தீமையும் இல்லை.'

அவர் கூறுகிறார், 'தலைமைத்துவம் கடமையானது என்பது உறுதியான விசயமென்றால் அது ஜிஹாது, கல்வியைத் தேடுதல் போன்று பர்ளு கிஃபாயா பொதுவான கடமைதான்.'

காழி அபூ யஃலா ﵀ கூறுகிறார்: 'இமாமை நியமிப்பது கட்டாயக் கடமையாகும்.' இமாம் அஹ்மது[13] ﵀ கூறுகிறார், 'மக்களை நிர்வகிக்கக்கூடிய இமாம் இல்லையென்றால் குழப்பம்தான் ஏற்படும்.'

நபித்தோழர்கள் நபியவர்களின் மரணத்திற்குப் பிறகு ஸகீஃபா என்ற இடத்தில் கருத்துவேறுபட்டபோது அன்ஸாரிகள் கூறினார்கள், 'எங்களில் ஒரு தலைவர், உங்களில் ஒரு தலைவர் இருக்கட்டும்.' அபூ பக்ரும் உமரும் ﵄ அவர்களின்பால் விரைந்து சென்று கூறினார்கள்: 'நிச்சயமாக அறபுகள் குறைஷிக் குலத்தைச் சேர்ந்

---

13 அஹ்மது இப்னு முஹம்மது இப்னு ஹம்பல் ﵀, ஹிஜ்ரீ 164 (கி.பி. 780) இல் பக்தாத் நகரில் பிறந்தார்கள். சிறுவயதிலேயே தந்தையை இழந்தாலும், தாயின் வளர்ப்பால், இமாம் அபூஹனீஃபாவின் மாணவர் அபூயூசுஃப் ﵀ அவர்களிடமும், இமாம் ஷாஃபிஈ ﵀ அவர்களிடமும் கல்வி கற்றார்கள். இவர்கள் தொகுத்த முஸ்னது எனும் ஹதீஸ் தொகுப்பு மிகவும் பிரபலமானது. இமாம் புகாரீ, முஸ்லிம், அபூ தாவூது போன்றோர் இமாமின் மாணவர்கள். கலீஃபா அல்மாமூன் ஆட்சியில் கடும் சத்தியசோதனைக்கு ஆளாகி, சிறையில் வாடினார்கள். கலீஃபா முதவக்கில் ஆட்சியில் விடுதலை பெற்று கண்ணியப்படுத்தப்பட்டார்கள். ஹிஜ்ரீ 241 ரபீஉல் அவ்வல் 12, வெள்ளிக்கிழமை மரணித்தார்கள்.